6th August 1965]

Sir, I want to correct the answer. So far as the Polytechnics are concerned, it is all right. So far as the I.T.I. trainees are concerned they are given free education in the I.T.Is.

Footwear production-cum-training centres

* 93 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of and the names of places of footwear production-*cum*-training centres in the State, and the number of trainees and persons employed in each of them?

THE HON. SRI R. VENKATARAMAN: Three Footwear production-*cum*-training centres are run by this Government. Particulars of their location and the number of trainees and workers in each are as follows:—

Name of the Unit. (1)	Number of Trainees. (2)	Number of Worker. (3)
Footwear Production-*cum*-Service Centre, Perambur.	18	116
Model Footwear Unit Perambur.		
Government Footwear Unit, Pallavaram.	10	37

A training centre for the manufacture of fancy leather goods sponsored by the Harijan Welfare department is also functioning at Virudhunagar with 15 trainees.

திரு. து. ப. அழகமுத்து : இதில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு உதவித் தொகை ஏதேனும் வழங்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்டைபெண்ட் கொடுக்கப் படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இந்த உற்பத்தி சாலைகள் லாபகரமாக வேலை செய்கின்றனவா அல்லது நஷ்டமாக வேலை செய்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1963-64-ல் பெரம்பூர் யூனிட்டில் 6,000 ரூபாய் லாபம், பல்லாவரம் யூனிட்டில் 23,000 லாபம் கிடைத்திருக்கிறது. திருவல்லிக்கேணி யூனிட்டில் ரூ. 8,000 நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது.

திரு. ஆ. தங்கவேலு : இதற்குக் கல்வி யோக்கியதாம்சம் முக்கியமா அல்லது வகுப்பு யோக்கியதாம்சம் முக்கியமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் எடுக்கப்பட்ட மாணவர்கள் குறைந்த பட்சம் எட்டாவது படித்தவர்களாக இருக்க வேண்டும். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு நாம் பிரபரன்ஸ் அதாவது சலுகை கொடுக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத்தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டில் திருவல்லிக்கேணி தயாரிப்பு நிலையம் 8,000 ரூபாய் நஷ்டத்தோடு செயல்பட்டதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்கான காரணம் என்ன என்று அறிய முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திருவல்லிக்கேணி யூனிட்டில் போதிய அளவு இந்தத் தொழில் செய்யக் கூடியவர்கள் இல்லை. ஆகையால் இதை திருவல்லிக்கேணியில் இருந்து பெரம்பூர் யூனிட்டுடன் சேர்க்கலாமா அல்லது பல்லாவரம் யூனிட்டுடன் சேர்க்கலாமா என்று யோசித்து வருகிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : உற்பத்தி நிலையங்கள் சென்னை நகரத்தைச் சுற்றி மட்டுமே இருக்கின்றன. வேறு மாவட்டங்களில் அவைகளை வைத்தால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேறு மாவட்டங்களிலும் வைத்திருக்கிறோம். அவையாவன :—

Vaniyambadi Shoe-Makers Industrial Co-operative Society, Vaniyambadi, and Industrial Co-operative Societies in Erode, Namakkal, Thanjavur, Tirunelveli, Tiruchirappalli, Dindigul and Coonoor.

MR. SPEAKER : Question Nos. 94 and 95 are postponed.

உலர்ந்த மீன் ஏற்றுமதி

*96 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உலர்ந்த மீன்கள் ஏற்றுமதியில் உள்ள கஷ்டங்களை போக்கக்கோரி மெரைன் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்சில் (Marine Export Promotion Council) வேண்டுகோள் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) எர்ணுகுளத்திலுள்ள கடல்படு பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி மன்றம் (Marine Products Export Promotion Council) அக்டோபர் மாதத்தில் இவ்வகை வாணிபத்திற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் சிலவற்றைக் குறிப்பிட்டது. மேலும் அரசாங்க மீனவத் துறையிலிருந்து மீனவத் துறை உதவி நெறியாளர் ஒருவரை மேற்படி மன்றப் பிரதிநிதியாக நியமனம் செய்ய அனுப்பப்பட வேண்டும் என்றும் அல்லாது நியமிக்கப்படுபவர் கொழும்பு நகரத்தை தலையிடமாகக் கொண்டு, இலங்கைக்கு உயர்ந்த மீன்களை ஏற்றுமதி செய்பவர்களின் நலன்களைக் காக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.